10.10.2024

C.C. No. 11/2024

ம.சா. 2. சுந்தர்ராஜன்

<u>குறுக்கு விசாரணை</u>

1) நான் பஜாஜ் நிறுவனத்தில் என்ன வேலை செய்கிறேன் என்றால் டு வீலர் பைனான்ஸ் கலெக்சன் செய்து வருகிறேன். நான் கடந்த 16 வருடங்கள் மேற்படி நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். நான் வசூல் செய்யும் தொகையை அன்றன்றே காரைக்குடியில் உள்ள பஜாஜ் நிறுவனத்தில் செலுத்திவிடுவேன். வசூல் செய்த தொகையை கேசியரிடம் கொடுத்துவிடுவேன். நான் வசூல் செய்த பணத்தை செலுத்தவில்லை என்றால் என்னுடைய மேலாளர், கேசியர் மற்றும் நிர்வாக இயக்குனர் கேட்பார்கள். எதிரி வீரமணிகண்டனை தெரியுமா என்றால் தெரியும். அவர் நான் வேலை செய்யும் காரைக்குடியில் உள்ள நிறுவன கிளையில் அவர் மேலாளராக பணியில் சேர்ந்ததிலிருந்தே தெரியும். எதிரியின் வீட்டிற்கு எத்தனை முறை சென்றேன் என்றால் இப்பிரச்சனைக்கு பின்னர் பல முறை சென்றிருக்கிறேன். எதிரி கையாடல்தான் செய்தார் என்ற விபரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் அக்கௌண்ட் செக்சனில் சொன்ன பின்னர்தான் தெரியும்.

2) நான் எதற்காக எதிரியின் வீட்டிற்கு சென்றேன் என்றால் எதிரி கையாடல் செய்த தொகையை 3 மாதத்தில் தருவதாக புகார்தாரர் இராமசாமி, நாராயணன் ஆகியோரிடம் சொன்னதால் நான் எதிரியின் வீட்டிற்கு சென்றேன். எதிரியின் வீட்டிற்கு சென்று பணத்தை வசூல் செய்வதற்கு புகார்தாரர் எனக்கு அனுமதி கொடுத்தாரா என்றால் எதிரி வீட்டிற்கு வரசொன்னதால் சென்றேன். நான் எதிரியின் வீட்டிற்கு பணம் கேட்க சென்றேனா அல்லது எழுதி வாங்க சென்றேனா என்றால் பணம் கேட்கத்தான் சென்றேன் எதிரி பணம் கொடுக்காமல் எழுதி கொடுப்பதாக சொன்னார். ம.சா.ஆ. 2 தாக்கல் செய்திருக்கும் பத்திரத்தை யார் வாங்கியது என்றால் எதிரியின் அம்மா பெயரில் வாங்கப்பட்டுள்ளது. பத்திரத்தை எதிரி தரப்பில்தான் வாங்கினர். யார் யார் பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளனர் என்றால்

எதிரியின் மனைவி பத்திரத்தை எழுதினார். நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். 100 ரூபாய் பத்திரத்தை எதிரியின் அம்மா அவரது பெயரில் வாங்கி வீட்டில் வைத்திருந்தார். பத்திரத்தில் உள்ள

விபரங்களை யார் எழுதியது என்றால் எதிரியின் அம்மா சொல்ல சொல்ல எதிரியின் மனைவி எழுதினார். பத்திரத்தில் உள்ள விபரங்களை நான் சொல்லியபடிதான் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வேலை செய்யும் நிறுவனத்திற்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பத்திரத்தில் எதிரி தரப்பில் யார் சாட்சியாக கையொப்பம் செய்தார்கள் என்றால் யாரும் இல்லை. எதிரி தரப்பில் சாட்சியாக கையொப்பம் செய்ய சொல்லி நான் சொல்லவில்லையா என்றால் இல்லை.

3) நான் எதிரி, எதிரியின் மனைவி மற்றும் அம்மா ஆகியோரை மிரட்டி கையொப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல. அவர்களின் சம்மதத்துடன்தான் பத்திரம் எழுதப்பட்டது. இவ்வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் இவ்வாறு சாட்சி சொல்லவில்லை என்றால் என்னை வேலையில் இருந்து நீக்கிவிடுவதாக புகார்தாரர் மிரட்டியதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's)
விரைவு நீதிபதி காரைக்குடி